**வாழைக்கான விலை முன்னறிவிப்பு**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தமிழ்நாடு பாசன விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின் விலை முன்னறிவிப்புத் திட்டமானது, பூவன், கற்பூரவள்ளி மற்றும் நேந்திரன் வாழைக்கான விலை முன்னறிவிப்பை உருவாக்கியுள்ளது.

வேளாண் மற்றும் உழவர் நல அமைச்சகத்தின் முதலாவது முன்கூட்டிய அறிக்கையின் படி, 2022-23 ஆம் ஆண்டு இந்தியாவில், வாழை 9.65 இலட்சம் எக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு 349.08 இலட்சம் டன்கள் உற்பத்தியாகும் என்று அறிவித்துள்ளது. இந்தியாவில் கர்நாடகா, ஆந்திர பிரதேசம், தமிழ்நாடு, கேரளா மகாராஷ்டிரா, உத்திரபிரதேசம் மற்றும் குஜராத் ஆகியவை வாழை பயிரிடப்படும் முக்கிய மாநிலங்களாகும்.

தமிழகத்தில் 2022-23 ஆம் ஆண்டு, வாழை 1.02 இலட்சம் எக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு 42.37 இலட்சம் டன்கள் உற்பத்திசெய்யப்பட்டுள்ளது. தமிழகத்தில் பொதுவாக ஈரோடு, தூத்துக்குடி, கோயம்புத்தூர், தேனி, திருநெல்வேலி, திருச்சி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் வாழை அதிகளவில் பயிரிடப்படுகிறது. திருச்சி, திருநெல்வேலி, கடலூர், தேனி மற்றும் கோயம்புத்தூர் ஆகியவை முக்கிய வாழைக்கான சந்தையாக தமிழ்நாட்டில் உள்ளது. இவற்றில் அதிகமாக திருச்சி சந்தையிலிருந்து வாழை பிறபகுதிகளுக்கு அனுப்படுகிறது.

தற்போது, கோயம்புத்தூர் சந்தைக்கு லால்குடி, கரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை மற்றும் முசிறி ஆகிய பகுதிகளிலிருந்தும், மேலும் தேனி பகுதிகளிலிருந்து வாழை திருச்சி சந்தைக்கும் அதிகமாக அனுப்பப்படுகிறது. வர்த்தக மூலங்களின்படி, பண்டிகை காலங்களில் வாழையின் தேவை அதிகரித்தாலும், கடந்த சில நாட்களாக பெய்து வரும் தொடர் மழை மற்றும் காற்றின் காரணமாக வாழை பெருமளவில் சேதமடைந்துள்ளதாக அறியப்படுகிறது.

இச்சூழலில், விலை முன்னறிவிப்பு குழு, கடந்த 19 ஆண்டுகளாக கோயம்புத்தூர் சந்தைகளில் நிலவிய பூவன், கற்பூரவள்ளி மற்றும் நேந்திரன் விலை மற்றும் சந்தை ஆய்வுகளையும் மேற்கொண்டது. ஆய்வின் முடிவில் டிசம்பர், 2023 மாதங்களில் பூவன் வாழையின் சராசரி பண்ணை விலை கிலோவிற்கு ரூ. 26 - 28, கற்பூரவள்ளி பண்ணை விலை கிலோவிற்கு ரூ. 28 - 30 மற்றும் நேந்திரன் வாழையின் பண்ணை விலை கிலோவிற்கு ரூ. 38 – 40 வரை இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. எனினும் வரும் காலங்களில் பருவநிலையை பொறுத்து விலையில் மாற்றங்கள் இருக்கும். எனவே விவசாயிகள் தகுந்த விற்பனை முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கபடுகின்றனர்.

**மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்**

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையம்

வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,

கோயம்புத்தூர்- 641003

தொலை பேசி – 0422 – 2431405

தமிழ்நாடு நீர்வளநிலவளத் திட்டம்

நீர் மற்றும் புவியியல் ஆய்வு மையம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

கோயம்புத்தூர்- 641003

தொலை பேசி – 0422 – 6611278

**மற்ற விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்**

பேராசிரியர் மற்றும் தலைவர்

பழப்பயிர்கள் துறை

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

கோயம்புத்தூர்- 641003

தொலை பேசி – 0422 – 6611269

## Price Forecast for Banana

The TN-IAM Project funded Price Forecasting Scheme of the Centre for Agricultural and Rural Development Studies, Tamil Nadu Agricultural University, Coimbatore has developed market advisory for banana.

Banana is cultivated in 9.65 lakhs hectare with a production of 349.08 lakh tonnes in India during 2022-23 according to the First Advance Estimates of Ministry of Agriculture and Farmer Welfare. Karnataka, Andhra Pradesh, Tamil Nadu, Kerala, Maharastra, Uttar Pradesh and Gujarat are the major banana growing states in the country.

In Tamil Nadu, the area under banana is 1.02 lakh hectare with a production of 42.37 lakh tones during 2022-23. Major banana growing districts are Erode, Thoothukudi, Coimbatore, Theni, Tirunelveli, Trichy, and Kanyakumari. Banana Market Centres in Tamil Nadu are Trichy, Tirunelveli, Cuddalore, Theni and Coimbatore. Among them, Trichy is one of the major centre for supplying banana to various parts of the State.

At present, banana arrivals are mainly from Lalkudi, Karur, Thanjavur, Pudukottai, Theni and local areas of Coimbatore to Coimbatore market. Traders reported that demand for banana may rise mainly due to festival season. Recent wind and rain have also damaged the crop significantly in banana growing areas.

Price Forecasting team has analysed the past 19 years prices of cultivars of Poovan, Karpooravalli and Nendhran banana of Coimbatore. The results of analysis and trader survey indicated that the expected average farm gate price will be around Rs. 26-28 per kg for Poovan, Rs. 28-30 for Karpooravalli and Rs. 38-40 per kg for Nendhran respectively, in Coimbatore market during December 2023 subjected to favourable weather conditions. Hence, farmers are advised to take appropriate selling decision accordingly.

***For further details contact:***

*Domestic and Export Market Intelligence Cell*
*Centre for Agricultural and Rural Development Studies*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore – 641 003*
*Phone: 0422-2431405*

*The Director and TN-IAMP Nodal Officer*
*Centre for Water and Geospatial studies*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore - 641 003*
*Phone: 0422-6611278*

***For technical details please contact:***

*Professor and Head*
*Department of Fruit Crops*
*Horticultural College & Research Institute*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore -641003*
*Phone -0422 -6611269*